**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU**

**MCOP No.47/19**

Dated :28.08.2024

RW 1, திரு. முரளி .த-பெ, சின்னபையன்

**முதல் விசாரணை-**

நான் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளராக திருக்கழுக்குன்றம் பகுதி அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.11.2018 அன்று டி.என்.19AX1524 என்ற இருசக்கர வாகனத்தை எனக்கு முன்னால் பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளா ஏ. சோமசுந்தரம் அவர்கள் விபத்து வாகனத்தை ஆய்வு செய்துள்ளார். வாகனத்தில் முன்புற முகப்பு விளக்கு முன்புற இடது பக்க சமிங்ளை விளக்கு, எரிபொருள் டேங்க், மற்றும் கிளர்ச் லிவர் ஆகியவை சேதமடைந்து காணப்பட்டது. விபத்து அறிக்கையின் படி வாகனத்தை திரு.பிரேம் குமார் த|பெ. யுவராஜ் என்பவரால் இயக்கப்பட்டுள்ளது. வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. வாகன ஆய்வாளா ஏ. சோமசுந்தரம் அவர்கள் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை எ.த.சா.ஆ.1. அவருடன் நான் பணிபுரிந்த வகையில் எனக்கு அவருடைய கையெழுத்து நன்கு தெரியும். அவர் தற்போது பணி நிமித்தமாக கடலூர் மாவட்டத்திற்கு பணிமாறுதல் ஆகி சென்று விட்டதால் அவர் சார்பாக இந்நீதிமன்றத்தில் நான் சாட்சியமளிக்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சி படித்துப் பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு28.08.2024 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்,

Witness Sd/-XXXX

Sd/-Tmt.T.JayashreeM.L.,

தலைமை குற்றவியல் நடுவர்,

செங்கல்பட்டு,